குழித்துறை மறைமாவட்டம்

# அடித்தளம்

## அன்பியங்களின் தொடர்பிதழ்

மலர் : 21 சனவரி 2026 இதழ் : 1



# ஆயரிடமிருந்து...

## புத்தாண்டு நல்வாழ்த்துகள்!



**பு**திய ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்நேரத்தில் அடித்தளம் வழியாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சிக் கொள்கிறேன்.

**ப**ல கனவுகளோடும் பல எதிர்பார்ப்புகளோடும் ஒவ்வொருவரும் புதிய ஆண்டைத் தொடங்குவர். புதிய ஆண்டு என்பது புதிய தொடக்கத்தை நினைவுபடுத்தும். அனைவருக்கும் இறைவன் கொடுக்கும் புதிய வாய்ப்பாக பார்க்கப்படும். இந்த வாய்ப்பு நம் தவறுகளை சரி செய்வதற்காக, நம்மையே புதுப்பிப்பதற்காக, புதுமையைத் தேடுவதற்காக. யார் ஒருவர் இந்த வாய்ப்பை சரிவர பயன்படுத்துகிறார்களோ அவர்களுடைய வாழ்வுச் செழிக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

**ஒ**வ்வொரு அன்பியத்திலும் புலர இருக்கின்ற இந்த புதிய ஆண்டு பல மாற்றங்களைக் கொணர வேண்டும் என்று விரும்புகிறேன். அனைவரும் தொடக்ககால கிறிஸ்தவர்களைப் போல அன்புறவிலும் நட்புறவிலும் சிறந்து வாழ வேண்டும் என்று விரும்புகிறேன்.

இவ்வாழ்க்கை முறை செயல்வடிவம் பெற மன்னித்தலும் விட்டுக்கொடுத்தலும் தலையாயப் பண்புகள் என்பதை மனதில் கொள்க. மன்னிக்கும் மனதிற்கு தான் வலிமை அதிகம். விட்டுக்கொடுக்கும் மனிதருக்குதான் உறவுகள் சாத்தியம். கடந்த நாட்களை விட இனிவரும் நாட்களில் பண்புள்ள மக்களாக, பக்குவப்பட்ட மக்களாக, ஆண்டவர் இயேசுவின் மதிப்பீடுகளை வாழ்வாக்கக்கூடிய மக்களாக வாழ முயற்சிப்போம்.

**ஒ**வ்வொருவருடைய வாழ்விலும் புலர இருக்கும் புதிய ஆண்டு புதுமைகள் பல படைக்கட்டும்.

**அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துகள்**

கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள,



**மேதகு ஆயர் ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ்**
குழித்துறை மறைமாவட்டம்



## இயக்குநரிடமிருந்து...



**பு**துமையும், புத்துணர்வும் நிறைவாக மனங்களில் பொங்கி எழ, புத்தாண்டையும். உழைப்பின் நன்றிப் பெருக்கையும் புதுப்பொலிவுடன் கொண்டாடும் இறைமக்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் தின நல்வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன்.

**அ**மைதியான இரவில் வண்ண வண்ண மின்விளக்குகள், ஒளியை மிஞ்சும் அளவில் ஒளிர்விக்கும் ஆடை அணிகலன்கள், குதூகலமாய் வகைவகையாக உணவுப்பதார்த்தங்களுடன் சிட்டுக்கள் துவங்கி முதிர்ந்த முத்துக்கள் வரை ஒரு புறம் புத்தாண்டைக் கொண்டாட, கிழிந்த கந்தலாடையோடு, மின்மினிப் பூச்சிகளின் வெளிச்சத்தில் ஒரு பிடி சோற்றிற்காக காத்திருக்கும் மானிடமும் இப்பூமியின் ஒரு பக்கம் வாழ்ந்துகொண்டேதான் இருக்கிறது என்பதை எண்ணும்போது புதிய ஆண்டு புலர்ந்ததா? என்ற கேள்வி இன்னும் எழுகிறது.

**ஆ**ண்டுகள் பல அயராது, துயிலாது உழைத்தும் ஆதவனுக்கு நன்றிச் செலுத்த முதற்கனிகளை வாங்க வரிசையில் கையேந்தி நிற்கும் நிலை என்று தான் விடியும்? தேனீக்கள் தங்கள் பணிகளைப் பகிர்ந்துச் செய்கின்றது. எறும்புகள் தங்களுக்கான உணவை இணைந்துச் சேர்க்கிறது. ஆனால், மனித இனம் மட்டும் தனக்கு மட்டுமே என்ற நோக்கத்தை கருத்தில்கொண்டுப் பகிர்தலை மறந்து, பிறர்நலம் துறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

“**ப**ழையனக் களைவோம் புதியனப் புகுவோம்” என்ற கோட்பாடு வார்த்தையோடு நின்றுவிடாமல் வாழ்க்கையாய் மாற்ற அன்பியங்களால் இணைந்து வாழ்வாக்குவோம். அன்பிருந்தால் சுயநலம் வேரோடு அழிந்துவிடும். இல்லாமை என்பது மறைந்து

எல்லோரும் எல்லாம் பெற்று வாழும் புது உலகம் உருவாகும். அன்பிய மாதத்தை அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாட "இல்லாமை" என்பது நீங்க முழு முயற்சி செய்வோம். நான் என்பதை மறந்து நாம் என்ற மனநிலையோடு வாழ்ந்து புது விடியல் காண அனைவரையும் மனமார வாழ்த்துகிறேன்.

**அனைவருக்கும் இனிய**

**புத்தாண்டு மற்றும் பொங்கல்**

**தின நல்வாழ்த்துக்கள்.**

பணி தோழமையில்

அருட்பணி. M. ஆல்வின் விஜய்
இயக்குநர், அன்பியப் பணிக்குழு


**YOU TUBE**

https://www.youtube.com/@anbiyamkuzhithuraidiocese945

**Website**

bcckuzhithurai.com

**E-mail ID**

bcckuzhithuraigmail.com

**Office No.**

**+91 7358947467**

# ஆசிரியர் குழு

அருட்பணி. M. ஆல்வின் விஜய்

வேதியர் M. பேபி கமலா

திரு. S. ஜாண் பெல்லார்மின்

திருமதி. T. ஷீலா

திருமதி. K. ரெத்தினபாய்



# உள்ளே →


- இயக்குநரிடமிருந்து...
- புதிராய் புலரும் புத்தாண்டின் புன்னகை ரகசியம்
  அருட்பணி. எட்வின் ராஜ் சி
- நல்ல காலம் பொறந்திருச்சு...
  அருட்பணி. ம. டைட்டஸ் மோகன்
- அன்பியம்...
  வேதியர். மா. பேபிகமலா
- உற்சவம்: அப்படியென்ன என்ன...
  திரு. K. ஆல்பின் ஜோஸ்
- 2026- சட்டமன்றத் தேர்தல் - அன்பியத்தின் கடமைகள், பணிகள்...
  திரு. S. ஜாண் பெல்லார்மின்
- மூத்தோர் சொல்லும் முது நெல்லிக்கனியும்...
  திருமதி. T. ஷீலா
- புத்தாண்டில் நல்ல உறுதிமொழிகள்...
  திருமதி, T. சுசீலா ராஜன்
- இளமை : சவலா? சாதனையா?...
  திரு. N. K. ரெஞ்சித்
- உடல் நலம் பேணுதல்...
  திருமதி, M. லில்லி ஜெனட் மேரி
- புனித தேவசகாயம் வாழ்ந்த வாழ்க்கை பாதையில் நாமும் பயணிப்போம்...
  திரு. S.T. டேவிட் ராஜ்
- பல்லாங்குழி...
  திருமதி. M. லிசி
- வரைவு வாக்காளர் பட்டியல்..
  அருட்பணி. M. ஆல்வின் விஜய்
- நட்டாலம் திருவிழா அழைப்பு...
- ஞாயிறு வழிபாடுத் தயாரிப்போம்...
- புதிய ஆண்டில் விடியல் ...

# புதிராய் புலரும் புத்தாண்டின் புன்னகை ரகசியம்

**பணி. எட்வின் ராஜ் சி.**



**பு**த்தாண்டு எப்போதும் புதுக் கனவுகளோடும் வாழ்வைப் பற்றிய கவலைகளோடும் புலர்ந்து மலர்ந்து உலர்ந்து உதிர்ந்து முடிந்துவிடுகிறது. இந்த ஆண்டும் புது ஆண்டை பலவித எதிர்பார்ப்புகளோடு தொடங்குகிறோம். கிறித்து பிறப்பின் கொண்டாட்டங்களோடு அதன் மண்வாசம் மறைவதற்குள் புத்தாண்டு வந்து விடுகிறது. சனவரி மாதம் ஆங்கிலப் புத்தாண்டோடு தமிழர் புத்தாண்டும் மலர்ந்து விடுகிறது. ‘தை பொறந்தா வழி பொறக்கும்’ என்ற நேர்மறை வாழ்த்தோடுதான் ஒவ்வொரு ஆண்டும் பிறக்கிறது. புத்தாடை புத்தரிசி புதுப்பானை புது-மஞ்சள் என்று புதியவற்றோடு புது-சிந்தனைகளும் புது-கனவுகளும் பூத்தே விடுகிறது.

**க**ரும்பு, வெல்லம், சர்க்கரைப் பொங்கல் என்று இனிப்போடுதான் துவங்குகிறோம் ஆனால் கசப்புகளோடே கடந்து விடுகிறது ஒவ்வொரு ஆண்டும். பலர் கடந்த ஆண்டில் இழந்தவற்றை நினைத்தே கவலையில், ஏமாற்றத்தின் ஏக்கத்தில் நிகழ்காலத்தை இழக்கிறோம். இன்னும் பலர் எதிர்காலத்தை எண்ணியே ஏக்கத்தோடே எதிர் இருக்கும் எதார்த்த வாழ்வை எரித்துவிடுகிறோம். நிகழ்கால நிஜங்களின் நிறைவையும், சமகால சுவாரஸ்சியங்களையும் அனுபவிக்காமலே பலரின் வாழ்வு இங்கு முடிந்தே விடுகிறது.

**இ**ந்த ஆண்டு வழக்கத்துக்கு மாறாக ஏற்றத்தோடும் மகிழ்ச்சியோடும் நிறைவோடும் அமைவதற்கு மூன்று வேண்டுகோள்களை தரலாம் என்று நினைக்கிறேன். நான் வாசித்ததை வைத்தும் வாழ்ந்து அறிந்து கொண்டதைக் கொண்டும் வாழ்வில் அனுபவித்ததை ஆய்ந்தும் தருகிறேன்.

இதை கற்பூரமாய் பற்றிக் கொள்பவர்கள் வெற்றி கொள்வார்கள். புத்தாண்டின் புன்னகை ரகசியமும் அதுவே!

**கடந்த ஆண்டை கடந்து வரலாமே!**

**“கடந்த காலத்தில் வாழ நினைப்பது கல்லறையில் சமைத்துச் சாப்பிடுவது மாதிரி”** என்று **சுகி சிவம்** என்ற பேருரை தரும் பெரும் ஆசான் பொட்டில் அடித்துச் சொல்கிறார். நம்மில் பலர் கடந்த காலத்தின் ஏமாற்றங்களை எண்ணியும், இழப்புகளை நினைத்தும், கவலைகளைச் சுமந்தும், பகைமைகளை வளர்த்துமே, நிகழ்கால நலன்களையும், நன்மையான நிமிடங்களையும், உண்மையான உறவுகளையும், வாழவேண்டிய தருணங்களையும், அனுபவிக்கவேண்டிய அன்றாட வாழ்வின் அதிசயங்களையும் இழந்தும் கடந்தும் செல்கிறோம். 2025 முடிந்துவிட்டது. முடிந்ததை கடந்ததை இழந்ததை நினைத்து கவலைகளில் முன்னிருக்கும் காலத்தை இழந்துவிடவேண்டாமே. கடந்து வருவோம் கடந்த ஆண்டை மட்டுமல்ல கடந்த காலத்தின் காயங்களையுமே. கடந்த காலத்தின் அனுபவங்கள் நமக்கு வழிதடமாகட்டும் ஆனால் வாழத் தடையாக வேண்டாமே.

**பகல் கனவுகளிலும் பயங்களிலும் எதிர்வரும் ஆண்டை தொலைக்கவேண்டாமே!**

**ப**லரும் இங்கே எதிர்காலத்தைக் குறித்த பகல் கனவுகளாலும், வருங்காலத்தைப் பற்றிய அச்சங்களாலும் கையில் இருக்கும் வாழ்வை, இந்த நாளை, இந்த நிமிடத்தை, இந்த கணத்தை இழந்துவிடுகிறோம். கையில் இருக்கும் வண்ணத்துப்பூச்சியை விட்டுவிட்டு பறக்கும் பரந்தை பிடிப்பதாய் கனவு காண்கிறோம். எதிர்காலக் கனவு வேண்டாம் என்பதல்ல என் வாதம். உயர்வான கனவைக் கொண்டிருப்போம், அதற்காக ஓடுவோம், வெற்றியும் பெறுவோம். ஆனால் இன்றய இந்த கணத்தின் மகிழ்வைத் தொலைத்து வெற்றுக்கனவுகளில் வாழ்வைத் தொலைக்க

வேண்டாமே. வாழ்க்கைக் குறித்த பயங்களே பலரின் வாழ்வையே அழித்துவிடுகிறது. ‘நாளை நினைத்து பயம், தேர்வு நினைத்து பயம், வேலை குறித்து பயம், குடும்பத்தை கரை சேர்பதை நினைத்து பயம், இறைப்பு வந்துவிடுமோ என்று பயம்’ என்று பயத்திலேயே வாழ்வை சிதை;து விடுகிறோம். பயத்தின் ஓட்டத்தில் வாழ்க்கையை வாழாமலேயே வாழ்வின் ஓட்டத்தையே முடித்துவிடுகிறோம்.

**நிகழ்கால நிஜங்களை அனுபவித்து வாழலாமே!**

**நா**ம் எதையுமே இன்று அனுபவித்து வாழ்வதில்லை. காலையில் எழுந்ததும் ஓடைக்கோ குளத்திற்கோ சென்று தண்ணீரின் தணுப்பை அனுபவித்து குளிப்பதில்லை அவசரமாக குளியலறையில் ஒரு சில குவளைகளோடோடு பொழியும் நீரின் துளிகளோடோடு முடிந்துவிடுகிறது குளியல். அவசரமாக பள்ளிக்கோ, கல்லூரிக்கோ, வேலைக்கோ செல்லவேண்டும் எனவே தேனீரைக் கூட நிதானமாக அதன் மணம் சுவை அழகு அறிந்து குடிப்பதில்லை மடமட வென தொண்டைக்குழிக்குள் ஊற்றிவிட்டு ஓடி விடுகிறோம். பேருந்தின் சன்னல் ஓரக் காற்றையோ, நகரும் மரங்களையோ பாடும் பறவைகளையோ ரசிப்பதும் இல்லை. இருசக்கர வாகனம் என்றால் அந்த வாகத்தை ஓட்டுவதையோ அதில் பயணிக்கின்ற இன்பத்தையோ அனுபவிப்பது இல்லை. வேகத்திற்கும் பரபரப்பிற்கும் இடையில் உயிரைத்தான் இழக்கிறோம். படிக்கிற படிப்பையும் நாம் விரும்பிப் படிப்பது இல்லை, செய்கிற வேலையையும் ரசித்து விரும்பிச் செய்வதில்லை. இப்படி நிகழ்கால நிஜங்களை நின்று ரசிக்காமல் சுவைக்காமல் அனுபவிக்காமல் கடந்த காலக் கவலையிலும் எதிர்கால பயங்களிலும் வாழ்வையே தொலைத்துவிடுகிறோம்.

நேற்று என்பது உடைந்த பானை-என்றும்
ஒட்ட முடியாதுதான்.
நாளை என்பது மதில்மேல் பூனை – எந்தப்பக்கம்
குதிக்கும் என்று தெரியாதுதான்.
இன்று என்பது கைமேல் வீணை – மீட்டுவோம்
பாடுவோம் வாழுவோம்.

**பு**திரான புது ஆண்டின் புதுமைகளோடு வாழத் தொடங்குவோம். இந்த ஆண்டு மட்டுமல்ல வரும் ஒவ்வொரு ஆண்டின் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் அனுபவித்து வாழத் தொடங்குவோம். கடந்தகால கல்லறையின் மேல் சமைத்து சாப்பிடாமலும், எதிர்கால கல்லறைக் குழிக்குள் இப்போதே வீழ்ந்து கிடக்காமலும் கண்ணிமைக்கும் ஒவ்வொரு நொடியையும் நின்று நிதானமாய் அனுபவித்து வாழத் தொடங்குவோம். இந்த புத்தாண்டு மட்டுமல்ல இனி எந்த புத்தாண்டும் இனிதாய் இன்;பம் மட்டும் நிறைந்ததாய் இருக்கும்.

**புத்தாண்டு வாழ்த்துகள்!**

**புதிதாய் பிறந்திட வாழ்த்துகள்!!**

**புன்னகை சூடிட வாழ்த்துகள்!!!**

**பயிற்சிக்கு:**

- **தனி நபர்கள்:** ஒரு நாள் ஒருமுறை ஒரு தேனீரையாவதும் நிதானமாய் ரசித்து ருசித்து அருந்திப் பாருங்கள். அந்த நாளும் மாறும் வாழ்வும் மாறும்.
- **குடும்பமாய்:** தினமும் இரவுணவு அனைவரும் சேர்ந்து அமர்ந்து பரிமாறி உண்டுபாருங்கள். அன்பு ஆழமாகும் உறவுகளும் சேர்ந்தே இருக்கும் (வாய்ப்பு இல்லாத குடும்ப உறுப்பினர்கள்- அலைபேசியில் நேரலையில் இணையுங்கள்)

# நல்ல காலம் பொறந்திருச்சு



**அருட்பணி. ம. டைட்டஸ் மோகன்**



**இ**னியாவது வாழ்க்கையில் முன்னேற்றம் வரும் என்று நம்புகிறவர்கள் துவங்கி இவ்வாண்டிலிருந்தாவது நல்லதே நடக்க வேண்டும் என்று வேண்டுதல் செய்கின்றவர்கள் வரை புத்தாண்டில் நமக்குள் வந்துபோகும் எண்ணவோட்டங்கள் பல. நல்ல காலம் பொறந்திருச்சு... என்று நம்புவதிலும் மாற்றத்திற்கான வேட்கைக் கொள்வதிலும் தவறில்லை. அதற்காக இனி துன்பங்களும் சவால்களும் வேதனைகளும் சோதனைகளும் வராது என்கிற உத்திரவாதத்தை யாரும் தர முடியாது. இயற்கையாக அது சாத்தியமுமல்ல. அப்படியெனில், நமது வாழ்க்கையில் "நல்ல காலம்" என்பது நேரம், காலம், ஆண்டுகள் பார்த்து நடக்கும் ஒரு செயல் அல்ல. மாறாக, உறவுகள், குடும்பம், இளமை மற்றும் சமூகம் கொண்டிருக்க வேண்டிய ஆழ்மனதின் தீராத நம்பிக்கை, எதிர்பார்ப்பு மற்றும் செயல்பாட்டு எதிர்நோக்கு. சவால்கள் மத்தியிலும் மீண்டெழுவதற்கான ஊட்டச்சத்து. இத்தகு புரிதல்கள்தான் இன்றைய தேவை. மாறாக, நல்ல காலத்தை ஜோதிடங்களிலும், மந்திரங்களிலும், மூடநம்பிக்கைகளிலும் நாடினால் தோல்வியும் வெறுமையுமே மிஞ்சிடும்.

## பிளவுகள் அச்சுறுத்தல்கள் நிறைந்த எதார்த்தம்

"**பி**ளவுகளும் அச்சுறுத்தல்களும்" இன்றைய நம் சமூகத்தின் வாடிக்கையாகிவிட்டன. இங்கு சிலவற்றைப் பட்டியலிடுவோம்:

**இ**ந்திய அளவில் அரசியலுக்காய் மதத்தை வைத்து மக்களைக் கூறுபோடும் சக்திகள் பெருகிக்கொண்டிருக்கின்றன; உறவுகளாய் நண்பர்களாய் அண்ணன் தம்பிகளாய் ஒன்றாய் வலம் வந்து கொண்டிருக்கும் நமது ஊர், அண்டை வீட்டார்களை மதத்தைக் காப்பாற்றும் போர்வையில் கூறுபோடத் துடிக்கின்றன. ஊழலும், ஆள்பலமும் தவிர்க்க முடியாத நடைமுறையாகிவிட்ட நிலையில் நாளுக்கு நாள் மக்களின் அடிப்படை உரிமைகளைக் காப்பாற்றும் தூண்களான காவல்துறை, நீதிமன்றங்கள் மற்றும் ஊடகங்களின் மீதான நம்பகத்தன்மையும் குறைந்துகொண்டிருக்கிறது.

**இ**ளைஞர்கள் நமது சமூகத்தின் எதிர்காலம். ஆனால், படிப்பிற்கேற்ற வேலையின்மை, வேலைக்கேற்ற திறனின்மை மற்றும் தொடரும் கலாச்சார மாற்றங்கள் அவர்களிடம் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. ஊடகங்களின் தாக்கம் அவர்களைப் பெரிதும் பாதிக்கிறது. சமூக ஊடகங்கள் தகவல்களை வழங்கினாலும், அவை வன்முறை, தவறான தகவல்கள் போன்றவற்றைப் பரப்புவதால், இளைஞர்கள் சரியான வழிகாட்டல் இல்லாமல் தடுமாறுகின்றனர். எப்படியாவது டிஜிட்டல் இன்ஃப்ளுயென்சர் ஆகிவிட்டால் போதும் என்பதையே வாழ்வின் இலக்காகக் கொண்டு பல வளரிளம் பருவத்தினர் இங்குச் செயல்படுகின்றனர். இதனால் நேரம் வீணாகிறது; போலிகள் நிஜமாகிறது. தற்போதைய செயற்கை நுண்ணறிவின் (AI) வளர்ச்சி சிந்திக்கும் திறனையும், படைப்பாற்றல் திறனையும் காவு கொள்கிறது; உண்மையையும் போலியையும் குழப்புகிறது. சமூக நம்பிக்கையை அசைக்கிறது, தகவல் பரவலைப் பாதிக்கிறது. யதார்த்தத்தின் அடித்தளத்தையே கேள்விக்குள்ளாக்குகிறது.

**ந**மது சமூகத்தில் உறவுகள் என்பது அடிப்படைத் தூண். ஆனால், நவீன வாழ்க்கையில் குடும்ப உறவுகள் பல சவால்களைச் சந்திக்கின்றன. திருமணம் மூலமான குடும்ப வாழ்க்கையே பலருக்கு கனவாகக் கிடக்கிறது. அதிக சம்பளம், தனி வீடு என்கிற நிபந்தனைகளால் வயது கடந்தும் திருமணம் முடியாமல் பலர் இங்கிருக்கின்றனர். இதனால் எதிர்காலத்தைப் பற்றிய பயத்தில் போதை, அறநெறி பிறழ்ந்த வாழ்வெனும் தவறான பாதைகளையும் தேர்ந்தெடுக்கின்றனர். திருமணம் முடிந்த இளம் தம்பதியர்கள் மத்தியிலும் பல்வேறு "ஈகோ" பிரச்சனைகள். விலைவாசி உயர்வாலும், பிள்ளைகளின் கல்விக்கட்டணச் சுமையாலும் கணவன் மனைவி இருவரும் சம்பாதித்தால் மட்டுமே குடும்பத்தை சமாளித்துக்கொள்ள முடியும் என்கிற நிலை. இல்லங்கள் வெறும் பணம் சம்பாதிக்கும் கருவியாகவே மாறிவிட்டன. வேலை அழுத்தம், பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் தனிமை குடும்பங்களைப் பிரிக்கின்றன. உதாரணமாக, பல குடும்பங்களில் பெற்றோரும் குழந்தைகளும் ஒருவருக்கொருவர் பேசுவதற்கு நேரம் இல்லாமல் போகிறது. இதனால், உணர்ச்சி ரீதியான இடைவெளி ஏற்படுகிறது. “உண்மையான குடும்ப உறவு இரத்த உறவில் இல்லை. மாறாக, ஒருவர் மற்றவரோடு பகிர்ந்துகொள்ளும் மரியாதை மற்றும் மகிழ்ச்சியில் உள்ளது" (ரிச்சர்ட் பாக்). இன்று பல குடும்பங்கள் இந்த மகிழ்ச்சியை இழந்து, “dysfunctional” ஆக மாறியுள்ளன. குடும்பமாய் நேரம் செலவிட வாய்ப்புகள் குறைவாகவே உள்ளது. குடும்பங்களில் பிரிவும், தனிமையும் அதிகரிக்கிறது. முதியோர், தொடர் நோயாளிகள், மாற்றுத்திறனாளிகள் இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

**நோ**ய் பயம் நம்மை அச்சுறுத்துகிறது. குறிப்பாக பெருகி வரும் புற்றுநோயின் தாக்கம் பெரும் அச்சுறுத்தலாகவே உள்ளது.

அரசின் சுகாதார அமைப்பில் உள்ள குறைபாடுகள் தொடர்கதையே! இதனால் அரசு மருத்துவமனைகளின் மீது இன்னும் முழு நம்பிக்கை வரவில்லை. எனவே, தனியார் மருத்துவமனைகளில் கூட்டம் குவிவதும், உழைப்பின் பெரும்பகுதியை மருத்துவ வணிகம் காவு கொள்வதும் எதிர்காலத்தின் மீதான அச்சத்தை நாளும் அதிகரிக்கிறது. பணம் உள்ளவர்களுக்கு மட்டும் சிகிச்சை என்கிற நிலையும், மறுவாழ்வுக்கு வழியின்மையும் விரக்தியை ஏற்படுத்துகிறது.

**அ**டுத்தவர் பற்றிய அச்சமும், அங்கீகார அச்சுறுத்தலும் அதிகமிருக்கு. மற்றவர்களை அச்சுறுத்தலாகவேப் பார்க்கிறோம். அடுத்தவர் என்ன நினைப்பார் என்கிற எண்ணத்திலே நமது நிம்மதியை இழக்கிறோம்; தவறாகிவிடுமோ என்கிற பதட்டத்திலே அவசிய செயல்களைக்கூட செய்யாமல் தவிர்க்கிறோம். சமீபத்திய ஆண்டுகளில் அந்நியர்கள், அறிமுகமில்லாமல் உதவிநாடி வீடுதேடி வருபவர்களுக்கு விருந்தோம்பலின் (hospitality) தூதுவர்களாய் இருப்பதை விட, பகைமையின் (hostility) பொருளாக அதிகளவில் மாறிக் கொண்டிருக்கிறார்கள். இதனை அருட்பணியாளரும் எழுத்தாளருமான ஹென்றி நௌவன் குறிப்பிடுகையில், சமூகம் அதன் விருந்தோம்பல் இயல்பை இழந்து, பகைமை மற்றும் பயத்தை அடிப்படையாகக் கொண்டதாக மாறிவிட்டது. நம்முடைய குடியிருப்புகளை நாய்கள் மற்றும் இரட்டைப் பூட்டுகளைக் கொண்டும், கட்டிடங்களை வாயிற்காப்பாளர்கள் கொண்டும் பாதுகாத்துள்ளோம். இதனால், நாம் ஆதரவற்றவர்கள் மீது அனுதாபம் வைத்திருந்தாலும், நம்முடைய சொந்த இடத்திற்குக் கதவைத் தட்டி உதவி கேட்கும் ஒரு உண்மையான அந்நியரை எதிர்கொள்ளும்போது, நம்முடைய உணர்வுகள் முரண்பட்டதாக (பயம் மற்றும் இரக்கம் கலந்ததாக) இருக்கின்றன என்கிறார்.

**ப**ணக்காரர்கள் பணக்காரராகவும், ஏழைகள் ஏழையாகவும் தொடரும் நிலையால் ஊர்கள், இடங்கள், அமைப்புகள் பலருக்கு ஒவ்வாமையைத் தருகின்றன. நலிந்த ஏழை குடிமக்களை நகரங்கள் ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றன. வீட்டு வாடகை உயர்வு, இடம்பெயர்வு மன அழுத்தங்களை அதிகரிக்கின்றன. சாதி, மத, இன, குழு வேறுபாடுகள் பிரிவினைகளின் கூடாரமாய் தொடர்கின்றன. இத்தகு சூழல்களில் நல்ல காலம் பொறந்தாச்சி என்றுச் சொல்வது எப்படி ஏற்புடையதாகும்?

**ஆனால் அது விழவில்லை...**

**இ**துபோன்று இன்னும் பல சவால்கள் நம்மைச் சோர்வடையச் செய்யலாம். ஆனால், இவை தீர்க்க முடியாதவை அல்ல. சமூகத்தின் பொதுவான பிரச்சினைகளை விழிப்புணர்வு வழியாகவும், அரசியலமைப்பு சட்டம் தரும் வழிகாட்டுதல்கள் வழியாகவும், அறவழி போராட்டங்கள் வழியாகவும் சந்திக்கலாம். தனிநபர், குடும்பம்சார் சவால்களை போதிய புரிதல்கள், புரிந்துணர்வுச் செயல்பாடுகள். நல்லொழுக்க பண்பாடுகள் வழியாகவும் அணுகலாம். இவையனைத்திற்கும் தேவை நம்பிக்கை எனும் ஆக்சிஜன். இறைவன்மீது - நம்மீது மற்றவர்மீது!

**தி**ருவிவிலியம் சொல்கிறது. "மழை பெய்தது; ஆறு பெருக்கெடுத்து ஓடியது; பெருங்காற்று வீசியது; அவை அவ்வீட்டின்மேல் மோதியும் அது விழவில்லை. ஏனெனில், பாறையின்மீது அதன் அடித்தளம் இடப்பட்டிருந்தது." (மத் 7:25). இப்புத்தாண்டு நமக்கு தரும் நம்பிக்கை இது மட்டுமே! நாளுக்கு நாள் பல பிளவுகள் அச்சுறுத்தல்கள் நம்மை வந்தடைந்தாலும் நாம் ஒருபோதும் முற்றிலும் புதைந்து அழிந்து போவதில்லை என்கிற நம்பிக்கை அவசியம். இப்படிச் சொல்ல காரணம் பல உண்டு. இயேசுவின் இறையாட்சி விழுமியங்களை உள்வாங்கி தியாகத்தோடும் அர்ப்பணத்தோடும் உழைக்கும் குருக்கள்,

துறவியர்கள், பொதுநிலையினர், ஆசிரியர்கள், மருத்துவர்கள், சமூக சேவகர்கள், இளைஞர்கள் என பலர் நம் மத்தியில் இன்றும் உள்ளனர். நேர்மை, பகிர்வு, நீதி ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டு அவர்கள் செயல்படுகின்றனர். குடும்பங்களில் குழந்தைகளுக்கு மதிப்பீடுகளைக் கற்றுக்கொடுக்கும் தாத்தா பாட்டிகள், பெற்றோர்கள் உள்ளனர். சவால்கள் மத்தியிலும் துணிச்சலோடும், கடின உழைப்போடும் வலம் வரும் இளைஞர்கள் உள்ளனர். காந்தியடிகள், அம்பேத்கர் போன்று இன்றும் பலர் சமூக நல்லிணக்கத்துக்காக உழைக்கின்றனர். அப்படியெனில் நமது அடித்தளம் அசைக்கப்பட்டாலும் உறுதியாய் உள்ளது. நாம் விழுந்தாலும் அழிந்து போய்விடாமலிருக்க, நொறுக்கப் பட்டாலும் உடைந்து போய்விடாமலிருக்க, கசைத்து பிழியப்பட்டாலும் நலிந்து போய்விடாமலிருக்க இவர்கள் நம்முடன் பயணிக்கின்றனர்; நமக்காக பொறுப்பு ஏற்க முன்வருகின்றனர். நமது அன்பியமும் இத்தகு நம்பிக்கையின் நங்கூரமே! இங்கு நாம் முன்னெடுக்கும் நற்செயல்பாடுகள் அனைத்தும் நம் நம்பிக்கையை ஆழப்படுத்துபவையே. தனித்தில்லை என்கிற உணர்வினை ஊட்டுபவையே!

## இரண்டு காரியங்கள்

**எ**னவே, நல்ல காலத்தை உருவாக்க இரண்டு காரியங்களை நாம் மனதில் நிறுத்த வேண்டும். ஒன்று, நாம் நம்பிக்கைக் கொள்ள வேண்டும். மற்றொன்று, நாம் செயல்பட வேண்டும். நம்பிக்கை என்பது வெறும் வார்த்தை அல்ல. அது செயல்பாடு. உதாரணமாக, வாரத்தில் ஒரு நாள் "குடும்ப நேரம்" என அமைத்து, அனைவரும் ஒன்றாக உணவருந்திப் பேசலாம். இது உறவுகளை மேம்படுத்தும். வளரிளம் மற்றும் இளைஞர்களுக்கு, ஊடகங்களைப் பயன்படுத்துவது குறித்த போதிய விழிப்புணர்வைத் தொடர்ந்து ஊட்டலாம். உதாரணமாக, “digital detox” ஊடகத்தைப் பயன்படுத்துவதற்கு ஓய்வு போன்ற நடைமுறைகளைப் பின்பற்றி,

உண்மையான உறவுகளுக்கு முன்னுரிமைக் கொடுக்கலாம். சமூகத்தில் நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்த இளைஞர்களைத் தொண்டு பணிகளில் ஈடுபடுத்தலாம். இது அவர்களுக்கு நம்பிக்கையைத் தரும்.

**க**டந்த காலத்திலிருந்து பாடம் கற்று, நிகழ்காலத்தில் வாழ்ந்து எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள நாம் செயல்பட வேண்டும். செயல்பட நாம் திட்டமிட வேண்டும்; திட்டமிட நாம் நம்மையே ஆய்வு செய்ய வேண்டும் - நம்மை, நம் குடும்பத்தை, பங்கு சமூகத்தை, ஊரை ஆய்வு செய்ய அதன் எதார்த்தங்களை கண்திறந்துப் பார்க்க வேண்டும். எதார்த்தங்களை மூடி மறைக்காமல் ஏற்க வேண்டும். இவையனைத்திற்கும் வாசிப்பு, யோசிப்பு. தொடர் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எனவே, உடனடியாகத் தொடருவோம். நம் பயிற்சிகளை, திட்டமிடுதல்களை, செயல்பாடுகளை இன்றே நல்ல காலம், இப்பொழுதே நல்ல நேரம்! புத்தாண்டிலே அன்பிய இறைமக்களே! இயேசு கிறிஸ்துவை அடித்தளமாகக் கொண்டு, நமது சமூகத்தை வலுப்படுத்துவோம். நம்பிக்கையுடன் முன்னேறுவோம் - அப்பொழுது நாம் விழுந்தாலும் எழுந்து நடக்கும் ஆற்றல் பெறுவோம்.

**அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துகள்**

**சிந்திக்க இரண்டு கேள்விகள்**

1. அன்றாட வாழ்வில் பொதுவான இல்லத்தை காக்க நாம் என்ன பொறுப்பை மேற்கொள்ளலாம்?
2. இன்றைய சவால்களை எதிர்கொள்ள இளைஞர்கள் மற்றும் குடும்பங்கள் எவ்வாறு ஒன்றிணைந்துச் செயல்படலாம்? என்னென்னச் செயல்பாடுகளை முன்னெடுக்கலாம்?

(இந்த ஆண்டிற்கான திட்டங்கள், செயல்பாடுகள் என்னென்ன என்பது குறித்து கலந்துரையாடல் நடத்தவும்)



# அன்பிய மாதம்

**வேதியர். மா. பேபிகமலா**
அன்பியப் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்



**இ**யேசுவின் இறையாட்சிக் கனவை பங்கு திருஅவையில் நனவாக்கும் இயக்க ஆற்றலைத் தன்னகத்தேக் கொண்டதுதான் அன்பியம். திருஅவை பங்கேற்புத் திருஅவையாக இருப்பதற்கும் இயங்குவதற்குமான தெளிவான, உறுதியான வெளிப்பாடுதான் அன்பியங்கள். எனவேதான் அன்பியம் திருஅவையின் உயிர் ஆற்றலின் அடையாளம். உயிர் ஆற்றல் உறவு வாழ்க்கைக்கு வித்திடுகிறது. இது அன்பாக, அன்பு வார்த்தையாக, உறவாக, மன்னிப்பாக, துன்பத்தில் பொறுமையாக, ஏழையோடு ஏழையாக, பணி வாழ்வாக, பகிர்வு வாழ்வாக, உயிர்ப்பின் உன்னத மகிழ்ச்சியாக வாழ அழைப்பு விடுக்கிறது. நம்பிக்கையாளர்கள் தங்கள் ஆழமான நம்பிக்கையை அன்பியத்தில் பகிர்ந்துகொள்ளவும் ஆண்டவரின் வாழ்வளிக்கும் வார்த்தைகளைச் சிந்தித்து செபமாக்கிச் செயல்படுத்திடவும் அன்பியங்கள் வாய்ப்பளிக்கின்றன. இதனை அன்பியங்களில் உணர்ந்து முனைப்புடன் செயல்படும்போது, அன்பியங்கள் வழியாக உயிரோட்டமுள்ள திருஅவையை நாம் உருவாக்கிட முடியும்.

**தொ**டக்க திருஅவையில் இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்ட மக்கள் தங்களிடையே வேற்றுமைகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் அகற்றி நட்புறவை நாளும் வளர்த்துக்கொண்டு வாழ்ந்தார்கள். இறையுறவில் ஆழப்படுவதற்காக ஒன்றுகூடினார்கள். அங்கு அன்பைப்

பகிர்ந்துகொண்டார்கள். உறவுகளை நாளும் புதுப்பித்துக் கொண்டார்கள். இருப்பதை இல்லாதவர்களோடுப் பகிர்ந்துகொண்டார்கள். இச்செயல்பாடுகளே இன்று அன்பியச் செயல்பாடுகளாகத் திகழ்கிறது.

**அன்பியம் சிறப்புற...**

1. அன்பியச் செயல்பாடுகளில் நம்மை அர்ப்பணித்துக் கொள்ளுதல்.
2. பலவித திறன்களை வளர்த்துக் கொள்ளுதல்.
3. தன்னிலைத் திறமைகளை வெளிப்படுத்துதல்.
4. வாய்ப்புகளைப் பயன்படுத்துதல்.
5. கொண்டாட்ட நிகழ்வுகளில், அன்பியத்தின் ஒவ்வொரு உறுப்பினர்களையும் பங்கேற்கச் செய்தல்.
6. துன்பத்தால், துயரத்தால், மகிழ்ச்சியில் முதுமையால், தனிமையால் ஏங்குவோரின் தேவைகளைப் பார்த்து, பேசி, உணர்ந்து, அவர்களோடு உடனிருந்து ஆற்றுப்படுத்துவதோடு அவர்களின் தேவைகளுக்கேற்ற வகையில் செயல்படுதல்.
7. அன்பிய மக்களுக்கு விழிப்புணர்வு பாடல் பயிற்சி வழங்குதல்.
8. அன்பியங்களில் பயிற்சிகள் வழங்குதல்.
9. ஒருங்கிணையத்தில் வருடத்திற்கு இரு பயிற்சிகள் வழங்குதல்.

**அன்பியம் மாதத்தை பொருளுள்ள முறையில் கொண்டாட...**

**அ**ன்பிய மாதம் என்பது விழா மட்டுமல்ல, அன்பிய வாழ்வை புதுப்பிக்கும் சிறப்பு காலமாகும். அன்பு, உறவு, உரையாடுதல், ஆற்றுப்படுத்துதல், ஆழப்படுத்துதல், உடனிருத்தல், மன்னித்தல், பகிர்தல் ஆகிய முன்னிலைப் பண்புகளைப் புதுப்பித்துச் செயல்படுத்த அழைக்கும் காலம்.

## அன்பிய மாதத்தைக் கொண்டாட சிறப்பாக சில பரிந்துரைகள்:

1. பங்களவில் அன்பிய சங்கம விழாக்கள் கொண்டாடுதல்.
2. உற(ண)வுத் திருவிழாக் கொண்டாடுதல்.
3. அன்பியங்களில் பழங்கால விளையாட்டுகள் சிறியவர் முதல் பெரியவர் வரைப் பங்கேற்கும் வண்ணம் நடத்துதல்.
4. அன்பியங்களை, அன்பிய இல்லங்களை அன்பிய ஒருங்கிணைய நிர்வாகிகள் இணைந்துச் சந்தித்தல்.
5. அன்பியத்திற்குட்பட்டு தேவையில் உழல்வோரை தேடிச் சென்று அவர்கள் தேவையில் உடனிருத்தல்.
6. அன்பிய மாதத்தை முன்னிட்டு உறவை வளர்க்கும் விதமாக சுற்றுலாச் செல்லுதல்.
7. அன்பிய எல்கையைக் கண்டறிந்து, அன்பிய உறுப்பினர்களின் புள்ளி விபரங்களைச் சேகரித்தல்.

**பகிர்வோம்:**

1. நம்முடைய அன்பியத்தில் நாம் என்னென்ன நிகழ்வுகளை முன்னெடுக்கலாம்?
2. அன்பிய மாதத்தை முன்னிட்டு நம்முடையப் பங்களிப்பை எவ்வாறு உறுதிப்படுத்தலாம்?



# உற்சவம்: அப்படியென்ன என்ன...

திரு. K. ஆல்பின் ஜோஸ்
அன்பியப் பணிக்குழு களப்பணியாளர்



## உற்சவம் என்றால் என்ன?





**உ**ற்சவம் என்பது வெறும் வெளிப்புற மகிழ்ச்சியும், அலங்காரங்களும், உணவுகளும் மட்டுமல்ல. உற்சவம் நன்றியுணர்வின் வெளிப்பாடு, உறவுகளின் சங்கமம். தனிநபரை சமூகமாக மாற்றும் ஓர் அனுபவம். உற்சவம் நம் உள்ளத்தை மகிழ்விக்கிறது; புத்துணர்வைத் தருகிறது; உறவை வலுப்படுத்துகிறது; பகிர்தலை உருவாக்குகிறது. "நான் தனியாக இல்லை" என்ற உணர்வை ஏற்படுத்துகிறது. நமது திருஅவையுமாகிய அன்பியம் உற்சவத்தை வாழ்வாக்க அழைக்கிறது.

**அ**ன்பிய மாதத்தில் நாம் பொங்கல் உற்சவத்தைக் கொண்டாடி மகிழ்கின்றோம். பொங்கல் என்பது இயற்கைக்கு நன்றிச் செலுத்தும் விழா. விவசாயிகள் கொண்டாடி மகிழும் விழா. அவர்களுக்கு மரியாதைச் செலுத்தும் விழா. உழைப்புக்கு நன்றிச் செலுத்தும் விழா. தமிழரின் வாழ்வோடு பின்னிப்பிணைந்த ஒரு விழா.

**"பொங்குதல்"** என்பது உணவு மட்டுமல்ல அன்பு பொங்க வேண்டும்; ஒற்றுமை பொங்க வேண்டும்; நம்பிக்கை பொங்க வேண்டும் என்பதற்கான அழைப்பே பொங்கல் உற்சவம்.

## அன்பியத்தில் உற்சவத்தை எவ்வாறு அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாடலாம்?

**அ**ன்பியம் என்பது நம்பிக்கையின் குடும்பம். அங்கே உற்சவம் என்பது ஆடம்பரம் அல்ல - அனுபவம். உற்சவத்தை நாம் எவ்வாறுக் கொண்டாடி மகிழலாம்:

1. **ஒற்றுமையுடன் கூடிய கொண்டாட்டம்:** எல்லா வயதினரும், ஏழை - பணக்காரர் என்ற வேறுபாடு இல்லாமல் அனைவரும் கலந்துகொள்ளும் விழாவாக இருத்தல்.
2. **பாரம்பரியத்தை நினைவூட்டும் செயல்கள்:** பாரம்பரிய விளையாட்டுகள், கிராமிய கலைகள், பொங்கல் தயாரித்தல்.
3. **பகிர்வு கொண்ட உற்சவம் :** உணவு, மகிழ்ச்சி, நேரம், அன்பு - எல்லாவற்றையும் பகிர்வதன் மூலம் உற்சவம் நிறைவு பெறல்.
4. **அன்பிய செய்திச் சொல்லும் நிகழ்ச்சி :** "நாம் அனைவரும் ஒரே குடும்பம்", "அன்பே நம் அடையாளம்" என்ற இறைச்செய்தியை வெளிப்படுத்தும் விவிலிய நிகழ்ச்சி.

### உற்சவம் நமக்கு தரும் பாடம்:

1. நன்றி மறக்காத மனிதனாக வாழ வேண்டும்.
2. உழைப்பை மதிக்க வேண்டும்.
3. உறவுகளைப் பாதுகாக்க வேண்டும்.
4. அன்பைப் பகிர்ந்தால் தான் வாழ்க்கைப் பொங்கும்.
5. சமூகமாக இணைந்தால்தான் நம்பிக்கை வளரும்.

### சிந்தனை:

- நமது அன்பியத்தில் நடைபெறும் உற்சவங்கள் என்னென்ன?
- அதை நாம் எப்படிக் கொண்டாடுகிறோம்?

# 2026 – சட்டமன்றத் தேர்தல்

## அன்பியத்தின் – கடமைகள், பணிகள்

**திரு. S. ஜாண் பெல்லார்மின்**
அன்பியப் பணிக்குழு களப்பணியாளர்



**இ**ந்திய ஜனநாயகத்தின் மிக முக்கியமான அடிப்படைத் தூணாக விளங்குவது தேர்தல் ஆகும். மக்கள் விரும்பும் நல்ல நேர்மையான, திறமையான தலைவர்களை தேர்வு செய்ய நல்வாய்ப்பாக அமைவது தேர்தல். அதிலும் குறிப்பாக, வரும் 2026-ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் மக்களாட்சியை வலுப்படுத்தும் ஒரு முக்கியமான கட்டமாகும். இத்தேர்தல் முறையாகவும் நேர்மையாகவும் நடைபெற அரசுத் துறைகளுடன் இணைந்து நமது அன்பியங்களும் முக்கியப் பங்காற்ற வேண்டியது காலத்தின் கட்டாயம்.

**2026-**ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் மாநில சுயாட்சி, மாநிலத்தின் வளர்ச்சி, சமூக நீதி, கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்புகள் என பல முக்கியமான கேள்விகளை நம் கண்முன்னேக் கொண்டு வருகிறது. "என்னுடைய வாக்கு என்ன மாற்றம் செய்யும்" என்ற கேள்வி இப்போது பலரிடம் எழும்பியுள்ளது. ஆனால், விழிப்புணர்வுடன் செலுத்தப்படும் ஒவ்வொரு வாக்கும் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என வரலாறுச் சொல்லுகிறது.

**அ**ன்பியத்தில் தேர்தல் குறித்து பேசுவது அரசியலைப் பரப்புவதற்காக அல்ல. மாறாக, நல்லாட்சியை விரும்பும் நல்ல மனதை உருவாக்குவதற்காக என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அன்பியம் என்பது யாரை தேர்வுசெய்ய வேண்டும் எனச் சொல்லும் இடம் அல்ல. மக்கள் தங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கும் (மக்கள்) பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் ஒரு பொன்னான வாய்ப்பாகும். அரசியலுக்கு அப்பாற்பட்டு மக்களின்

நலன், உரிமைகள், கடமைகள் மற்றும் விழிப்புணர்வு ஆகியவற்றை முன்னிலைப்படுத்திச் செயல்படும் ஒரு மாபெரும் சக்தியாகும்.

**தேர்தலில் அன்பியங்களின் பணிகள்:**

**1. வாக்காளர் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்:**

**ந**மது வாக்கின் மதிப்பு, ஜனநாயகத்தின் அவசியம், வாக்குப்பதிவு நடைமுறைகள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவது அன்பியங்களின் முதன்மையான பணியாகும். அதிலும் குறிப்பாக முதல் முறை வாக்குச் செலுத்தும் இளைஞர்கள் அவர்களை ஊக்கப்படுத்தி முறையாக வாக்குச் செலுத்த வைப்பதும் அன்பியத்தின் கடமையாகும்.

**2. சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்:**

**தே**ர்தல் நடைமுறைகள் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடைபெறுகிறதா என்பதை கண்காணித்து முறைகேடுகள் இருந்தால் அதை உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுச் செல்வதும் அன்பியத்தின் பொறுப்பாகும்.

**3. சமூகத்தில் பின்தங்கியவர்களை தேர்தலில் இணைத்தல்:**

**மா**ற்றுத்திறனாளிகள், முதியோர், சமூகத்தால் புறக்கணிக்கப் பட்ட மக்கள் மற்றும் 18 வயது நிரம்பிய இளையோர் இவர்களை இனம்கண்டு அவர்களும் தேர்தலில் பங்குபெற உதவுதல், வழிகாட்டுதல் மற்றும் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட அன்பியங்கள் முன்வருதல் சிறப்பானச் செயலாக அமையும்.

**அ**ன்பியங்கள் ஜெபிக்கும் சமூகமாக இருந்து, சிந்திக்கும் சமூகமாக மாறி, பொறுப்புள்ள செயல்பாடுகளால் நம்பிக்கையை விதைக்கும் அமைப்பாக மாற வேண்டும்.

**2026** ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் சிறப்பாக நடைபெற அரசு துறைகளுடன் இணைந்து அன்பியங்கள் செயல்படும் போதுதான் உண்மையான ஜனநாயகம் பிறக்கும். மனித நேயம் மலரும். ஒவ்வொரு குடிமகனும் நாட்டின் உண்மை நிலையை உணர்ந்து பொறுப்புடன் செயல்பட்டால் நம் (நாட்டின்) எதிர்காலம்

வளமானதாக அமையும். ஆகவே, விழிப்புணர்வோடு ஜனநாயக கடமை ஆற்றுவோம். நாளைய சமூகத்திற்கு நம்பிக்கை விதையை விதைப்போம்...

**சிந்தனை:**

1. "எனது வாக்கு எனது உரிமை" - கலந்துரையாடுதல்
2. நமது அன்பியத்தில் தேர்தல் விழிப்புணர்வு எவ்வாறு உள்ளது?

## மூத்தோர் பக்கம்

# மூத்தோர் சொல்லும் முதுநெல்லிக்கனியும்



**திருமதி. T. ஷீலா.**
அன்பியப் பணிக்குழு களப்பணியாளர்

மூத்தோர் சொல்லும் முது நெல்லிக்கனியும்
முன்னே கசக்கும் பின்னே இனிக்கும்



மூத்தோர் சொல்லும் முது நெல்லிக்கனியும் என்பது ஒரு பழமொழி இதன் பொருள் பெரியவர்களின் அறிவுரைகள் ஆரம்பத்தில் கசப்பாக அல்லது புரிந்துகொள்ள கடினமாகத் தோன்றினாலும், காலப்போக்கில் உண்மையான அதன் மதிப்பும், இனிமையும் புரியும்; வாழ்க்கை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதாகும். இது முதுநெல்லிக்கனியின் சுவையைப் போன்றது. முதலில் கசப்பு, பிறகு இனிப்பு.

மூத்தோர்கள் அழகு இழந்தவர்களாகவும், தோல் சுருங்கியவர்களாகவும், வலுக்குறைந்து காணப்பட்டாலும்

அனுபவத்தால் தங்களை அலங்கரித்துக் கொண்டவர்கள். அவர்கள் கூறும் வார்த்தைகள் இன்றைய தலைமுறைக்கு சில நேரங்களில் பழையதாகவும், கடுமையாகவும், அவசியமற்றதாகவும் தோன்றலாம். ஆனால், வாழ்க்கை அனுபவத்தில் உப்பு கலந்திருப்பதால் அந்த வார்த்தைகளின் உண்மைத்துவம் பின்னாளில்தான் புரியும்.

**அ**வர்கள் அனுபவத்தின் நூல்கள், அன்பின் அடையாளங்கள். முதியோரை பாதுகாப்பது சமூகப்பணியல்ல; ஓர் மனிதக் கடமை. அவர்களுக்கு தேவையானது பெரிய வசதிகள் அல்ல. அன்பான உரையாடல் மற்றும் உடனிருப்பு. அன்பிய உறவுகளே, முதியோரை நாம் பாரமாக அல்ல, பரிசாக பார்க்கக் கற்றுக்கொள்வோம். அவர்களைப் பாதுகாப்போம், அவர்களை மதிப்போம்; அவர்களிடமிருந்து ஞானத்தைப் பெறுவோம்.

**அ**ப்போதுதான், ஒரு நாள் நாமும் முதியோராகும்போது, நம் வார்த்தைகளும் முதுநெல்லிக்கனியாக மதிக்கப்படும். முன்னே கசக்கும்... பின்னே இனிக்கும்... அந்த இனிமை மனிதநேயத்தின் மிகச் சிறந்த சுவை.

## சிறார் பக்கம்

# புத்தாண்டில் நல்ல உறுதிமொழிகள்

**திருமதி. T. சுசீலா ராஜன்**
சிறார் பணிக்குழு களப்பணியாளர்



**பு**த்தாண்டு என்பது ஒரு புதிய தொடக்கம். நல்ல விஷயங்களை நினைவில் வைத்து புதிய ஆண்டில் நம்மை மேலும் சிறந்தவர்களாக மாற்றிக்கொள்வது. குழந்தைகளும் புத்தாண்டு உறுதிமொழிகளை எடுத்துக்கொள்வது மிகவும் முக்கியம். இந்த உறுதிமொழிகள் அவர்களை ஒழுக்கமானவர்களாகவும், பொறுப்புள்ளவர்களாகவும், தன்னம்பிக்கை உள்ளவர்களாகவும் வளர உதவும். குழந்தைகள்

உறுதிமொழிகள் எடுக்கும்போது ஒரு இலக்கை நோக்கிச் செயல்படும் மனப்பான்மை அவர்களுக்கு ஏற்படும். மேலும், நல்ல பழக்கம் சிறிய இலக்குகள் என்றாலும் அவற்றைச் சாதிக்கும்போது கிடைக்கும் மகிழ்ச்சி, பல நல்ல விஷயங்களைச் செய்ய அவர்களைத் தூண்டும்.

**குழந்தைகள் எடுக்கவேண்டிய சில நல்ல உறுதிமொழிகள்:**

தினமும் ஜெபிப்பேன், படிப்பில் கவனம் செலுத்துவேன், நல்ல பழக்கங்களை கடைப்பிடிப்பேன், உடல்நலத்தில் அக்கறைக் கொள்வேன், பிறருக்கு உதவுவேன், அன்பாக இருப்பேன், புதிய திறன்களைக் கற்றுக்கொள்வேன்.

**உறுதிமொழிகளைக் கடைப்பிடிக்கும் வழிகள்**

1. பெற்றோரின் கனவு மிகவும் அவசியம்.
2. **ஊக்குவிப்பு :** அவர்கள் சிறிய இலக்குகளை அடைந்தாலும் மனதாரப் பாராட்ட வேண்டும்.
3. **நினைவூட்டல் :** ஒரு அழகான அட்டையில் உறுதிமொழிகளை எழுதி அவர்கள் அடிக்கடி பார்க்கக்கூடிய இடத்தில் ஒட்டவும். உதாரணம் : பெற்றோராகிய நீங்களும் நல்ல உறுதி மொழிகளை எடுத்துக்கொண்டு அதைக் கடைப்பிடிப்பதன் மூலம் அவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கலாம். புத்தாண்டு உறுதிமொழிகள் என்பது ஏதோ ஒரு நாளில் முடிந்து போவது அல்ல. அது ஒரு நல்ல பழக்கத்தை நம் வாழ்வில் நிரந்திரமாகக் கொண்டு வர எடுக்கும் ஒரு சிறு முயற்சிதான். குழந்தைகளை இந்த நல்ல உறுதிமொழிகளை எடுத்து அதனை ஆண்டு முழுவதும் பின்பற்றி சிறந்த மாணவர்களாகவும், நல்ல மனிதர்களாகவும் வாழ்வில் வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

## இளையோர் பக்கம்

# இளமை : சவாலா? சாதனையா?



N.K. ரெஞ்சித்

**இ**ளைஞர்கள் என்றாலே சவால். இளைஞர்களால் தான் சவால். அனைத்துக்கும் காரணம் இளைஞர்கள் போன்ற சொற்றொடர்களை நாம் அடிக்கடிக் கேட்டிருக்கக்கூடும். அது இயல்பாகவே உண்மையானதா? அதற்குக் காரணம் முழுமையாக இளைஞர்கள் தானா? என ஆய்வுக்கு உட்படுத்தினால் இல்லை என்பதே பதிலாகக் கிடைக்கும்.



**இ**ளமை என்பது மனித வாழ்வின் மிக முக்கியமான, மாற்றங்களை உருவாக்கும் காலகட்டமாகும். இந்தக் காலத்தில் உடல் வலிமை, மனத் துணிவு, சிந்தனை வேகம் ஆகியவை உச்சத்தில் இருக்கும். கனவுகள் அதிகமாக உருவாகும். உலகை மாற்ற வேண்டும், வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற ஆர்வமும், சிந்தனைகளும் மனதில் எழும். அதேநேரம் அனுபவக் குறைவு காரணமாக எது சரி, எது தவறு என்பதைத் தீர்மானிக்க முடியாமல் குழப்பம் ஏற்படுவதும் இயல்பானதே. இங்குதான் இளமை ஒரு சவாலாகத் தோன்றுகிறது.

**இ**ன்றைய சூழலில் இளையோர் பல்வேறு அழுத்தங்களுக்கு இடையே வாழ்கிறார்கள். கல்வி, வேலை, குடும்ப எதிர்பார்ப்புகள், சமூக மதிப்பீடுகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவை ஒரே நேரத்தில் அவர்களைச் சூழ்கின்றன. சமூக வலைதளங்கள் உடனடி மகிழ்ச்சியையும், போலியான வெற்றிகளையும் காட்டி மன

அழுத்தத்தை அதிகரிக்கின்றன. நண்பர்கள் வட்டம், பழக்க வழக்கங்கள், நவீன தொழில்நுட்பம் ஆகியவை தவறான பாதைக்கு இழுக்கும் அபாயமும் இருக்கிறது. இந்த அனைத்தும் இளமையை சவாலானதாக மாற்றுகின்றன. அதே இளமை, சரியான வழிகாட்டல் மற்றும் தெளிவான இலக்குடன் இருந்தால், மிகப் பெரிய சாதனைகளுக்கான அடித்தளமாக மாறுகிறது. உழைப்பதற்கான ஆற்றல், புதுமையாக சிந்திக்கும் திறன், தோல்வியைக் கூட அனுபவமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு ஆகியவை இளமையின் சிறப்புகள். தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்ளும் ஒழுக்கம், நேர மேலாண்மை, பொறுப்புணர்வு ஆகியவை வளரும்போது, இளையோர் சவால்களை வாய்ப்புகளாக மாற்ற முடிகிறது. மேலும், இளமையில் உருவாகும் மதிப்பீடுகள் மற்றும் வாழ்க்கை நெறிகள், எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றன. நல்ல நட்பு, நல்ல வாசிப்பு பழக்கம், சமூகப் பொறுப்பு, ஆன்மீகம் ஆகியவை இளமையைச் சிறப்பாக்குகின்றன. தவறுகள் நிகழ்ந்தாலும், அவற்றில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு முன்னேறும் திறன் இளமையின் மிகப் பெரிய பலமாகும்.

**கி**றிஸ்து வாழ்கிறார் (Christus Vivit) ஊக்கவுரையில் திருத்தந்தை பிரான்சிஸ், இளையோர் திருச்சபையின் எதிர்காலம் மட்டும் அல்ல, இன்றைய நிகழ்காலமும்தான் என வலியுறுத்துகிறார். இளையோர் இன்னும் தயாராகிக் கொண்டிருப்பவர்கள், பிறகு பொறுப்பு ஏற்க வேண்டியவர்கள் என்ற எண்ணத்தை அவர் மறுக்கிறார். திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் இப்போதே இளையோர் செயலில் ஈடுபட வேண்டும் என்பதே அவரது அழைப்பு. இந்த பார்வையில், இளமை காத்திருக்கும் காலமாக அல்ல, கடவுள் தந்த திறன்களை இன்றேப் பயன்படுத்தி மாற்றத்தை உருவாக்க வேண்டிய காலமாக மாறுகிறது. மேலும், இளமையை சந்தேகங்களும் கேள்விகளும்

நிறைந்த காலமாகக் காண்கிறார். வாழ்க்கையின் அர்த்தம், எதிர்காலத் திசை, நம்பிக்கை, உறவுகள் குறித்து எழும் கேள்விகள் இளமையின் இயல்பான சவால்கள். இக்கேள்விகளை பயப்பட வேண்டியவையாக அல்ல, வளர்ச்சிக்கான வாய்ப்புகளாகக் கருத வேண்டும் என அவர் கூறுகிறார். எனவே, இளமை ஒரு வாய்ப்பு. அந்த வாய்ப்பை எவ்வாறு பயன்படுத்துகிறோம், பண்படுத்துகிறோம் என்பதே முக்கியம். தெளிவான நோக்கம், நிலையான முயற்சி, பயிற்சி, நல்ல வழிகாட்டல் இணைந்தால், இளமை சவால்களைத் தாண்டி, வாழ்க்கையின் மிகச் சிறந்த சாதனைகளாக மலரக்கூடிய பருவமாக மாறுகிறது.

**சிந்தனைக்கு:**

1. நமது பகுதி/ பங்கு அன்பிய இளைஞர்கள் குறித்து நமது பார்வை எப்படிப்பட்டதாக உள்ளது?
2. இளைஞர்களின் ஆளுமை உருவாக்கத்திற்காக, நாம் மேற்கொண்டுள்ள முயற்சிகள் யாவை?

## மருத்துவ பக்கம்

# உடல் நலம் பேணுதல் (இயற்கை)

**திருமதி M. லில்லி ஜெனட் மேரி**
அன்பியப் பணிக்குழு களப்பணியாளர்



**குளிர் காலங்களில் நம்மை தாக்கும் பொதுவான நோய்கள் :**

சளி, இருமல், காய்ச்சல், மூச்சுக்குழாய் அலற்சி, தொண்டை வலி, மூட்டுவலி, வறண்ட தோல் நோய்கள்.

**காரணங்கள்:-**

1) காலநிலை மாற்றம்
2) நோய் எதிர்ப்புச் சக்தி குறைவு
3) குளிர்ந்த நீர்
4) குளிர் உணவுகள் உண்ணுதல்



**அறிகுறிகள்:-**

1. மூக்கு ஒழுகுதல்
2. தும்மல்
3. இருமல்
4. தொண்டைவலி
5. லேசான தலைவலி
6. லேசான காய்ச்சல்

**தீர்வு:-**

1. போதுமான ஓய்வு எடுத்தல்.
2. போதிய தண்ணீர் அருந்துதல்.
3. திரவ உணவுகளை உட்கொள்ளுதல்.
4. வெந்நீரில் தேன் - எலுமிச்சை பழச்சாற்றைக் கலந்துக் குடித்தல்.
5. வெந்நீரில் ஆவிப் பிடித்தல் வேண்டும்.
6. சுடு நீரில் உப்புக் கலந்து வாய் கொப்பளித்தல். சுக்கு, மிளகு, திப்பிலி கலந்து தேநீராக பருகுதல். வாரம் ஒரு முறை நிலவேம்பு கசாயம் அருந்துதல்.

**"சுவர் இருந்தால் தானே**
**சித்திரம் வரைய முடியும்"**



# புனித தேவசகாயம் வாழ்ந்த வாழ்க்கை பாதையில் நாமும் பயணிப்போம்...

**திரு. S.T. டேவிட் ராஜ்**
அன்பியப் பணிக்குழு களப்பணியாளர்





## யார் இந்த புனித தேவசகாயம் :

**1712**-ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நட்டாலம் என்னும் ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தார். இவருடைய இயற்பெயர் நீலகண்டன்பிள்ளை என்பதாகும். இவர் திருவிதாங்கூர் அரசின் அரண்மனையில் உயர் பதவியில் பணியாற்றி வந்தார். இறை இயேசுவின் நம்பிக்கையை ஏற்றுக்கொண்டு தேவசகாயம் என்ற பெயரைப் பெற்றார். கிறிஸ்தவ நம்பிக்கையை வெளிப்படையாகக் கடைப்பிடித்ததற்காக பல துன்புறுத்தல்களை அனுபவித்தார். சாதி வேறுபாடுகளுக்கு எதிராக எல்லோரும் சமம் என்ற கருத்தை வாழ்வில் நடைமுறைப்படுத்தியதால் 1752-ஆம் ஆண்டு உயிர் தியாகம் செய்தார். 2022-ஆம் ஆண்டு மே 15-ஆம் நாள் இவர் புனிதராக அறிவிக்கப்பட்டார்.

## புனிதரின் வாழ்க்கை பாதை :

இவர் தம் முதல் பெயரை மாற்றிக்கொண்டதுபோல தாம் வாழ்ந்த வாழ்க்கை பாதையையும் மாற்றிக்கொண்டார். சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும், எல்லோரும் சமநிலை அடையவேண்டும் என்ற எண்ணம். கிறிஸ்தவ மதத்தில் அதிக

நம்பிக்கை, சிறந்த மதம் என்ற மதத் தேர்வு முறை, பிறர் அன்பு, சமத்துவம், உயிர் தியாகம், தைரியமான சாட்சி, அதிகாரம், அந்தஸ்து இவைகளை தாண்டிய நீதியின் வாழ்க்கை, அநீதிக்கு எதிராக குரல் கொடுத்தல், அனைவரும் சகோதரர், சகோதரிகள் என்ற எண்ணம். இறை நம்பிக்கையும் மனித மரியாதையையும் விட்டுக் கொடுக்காமை, தனக்கு துன்பம் கொடுத்தவர்களையும் மன்னித்து ஏற்றுகொள்ளுதல், வேறுபாடுகளை உடைத்து ஒற்றுமையுடன் வாழ்ந்த வாழ்க்கை புனித தேவசகாயம் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை பாதையாகும்.

**ஆ**கையால், மனிதன் வாழ்கின்ற வாழ்க்கை எவ்வளவு காலம் என்பதல்ல. மாறாக எத்தகைய வாழ்க்கை வாழ்ந்தோம், எத்தகைய மாற்றங்கள் ஏற்படுத்தினோம் என்பதே முக்கியம்.

**ஆ**கவே, நம் வாழ்விலும் இறை நம்பிக்கை, பிறர் அன்பு, தவறு செய்தவர்களை மன்னித்து ஏற்றுக்கொள்ளுதல், அதிகாரம், அந்தஸ்து என்னும் அடக்குமுறையை தாண்டி நீதியின் நல்வாழ்வு, அநீதிக்கு எதிராக தைரியமாக குரல் கொடுத்தல், நாம் அனைவரும் இறை இயேசுவின் பிள்ளைகள் என்ற சகோதர உணர்வுடன் வாழ புனிதருடைய வாழ்க்கை பாதை நமக்கு வழிகாட்டுகிறது. நாமும் கரம் கோர்த்துப் பயணிக்க அன்பியமாய் இணைவோம். அன்பாய் வாழ்வோம்.



# பல்லாங்குழி

**திருமதி M. மேரி லிசி,**
அன்பியப் பணிக்குழு களப்பணியாளர்



## முன்னுரை

**த**மிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டுகள் மனித வாழ்க்கையோடு நெருக்கமாக இணைந்தவை. உடல், மன திறனை வளர்ப்பதுடன், சமூக உறவுகளையும் வலுபடுத்தியவை. அவற்றில் மிகவும் பழமையானதும், இன்று வரை கிராமங்களிலும், வீடுகளிலும் விளையாடப்படுவதும் பல்லாங்குழி ஆகும். குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் மத்தியில் பரவலாக விளையாடப்பட்ட இந்த விளையாட்டு எண்ணிக்கை, அறிவு, கவனம், திட்டமிடல் போன்ற திறன்களை வளர்க்கிறது.

## பல்லாங்குழியின் அமைப்பு

**ப**ல்லாங்குழியின் பலகை பொதுவாக மரத்தால் செய்யப்படும். இதில் 7 குழிகள் வீதம் இரண்டு வரிசைகளாக இருக்கும்.



## விளையாட்டிற்கு தேவையான பொருட்கள்

**ப**ல்லாங்குழி விளையாட கற்கள், விதைகள், சோள மணிகள், புளியங்கொட்டைகள் இவைகளில் ஏதேனும் ஒன்றுப் பயன்படுத்தப்படுகிறது.

## விளையாடும் முறை

**இ**ரண்டு நபர்களால் விளையாடப்படும் விளையாட்டு, ஒவ்வொரு வீரரும் தங்களின் பக்கம் உள்ள 7 குழிகளை பயன்படுத்துவார். ஆரம்பத்தில் ஒவ்வொரு குழியிலும் 5 மணிகள் வைக்கப்படும். யார் முதலில் தொடங்குவது என்பது ஒப்பந்தத்தால் தீர்மானிக்கப்படும்.

## மணிகளை விதைக்கும் முறை

**வீ**ரர் தன் பக்கம் உள்ள ஒரு குழியிலிருந்து அனைத்து மணிகளையும் எடுப்பார். அவற்றை வலப்புறம் நோக்கி அடுத்தடுத்த குழிகளில் ஒவ்வொன்றாகப் போட வேண்டும். எதிர்பக்க வீரரின் குழிகளிலும் மணிகளைப் போடலாம். ஆரம்ப குழியில் மீண்டும் மணிகளைப் போடக்கூடாது.

## விதிமுறைகள்

**க**டைசி குண்டு விழுந்த குழியில் 4 குண்டுகள் இருந்தால் அவை அனைத்தும் 4 இருந்தால் அவையும் பிடிக்கலாம். பிடித்த மணிகள் வீரரிடம் தனியாக வைக்கப்படும். அதிக மணிகளைப் பெற்றவர் வெற்றியாளர்.

## முடிவுரை

**ந**மது பாரம்பரியமிக்க பல்லாங்குழியை விளையாடுவதால் கணித திறன் மேம்படும். நினைவாற்றல் மற்றும் திட்டமிடல் திறன் வளரும். பொறுமை, கவனம் அதிகரிக்கும். எனவே, பல்லாங்குழி நமது பாரம்பரியமிக்க விளையாட்டுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

# ஞாயிறு வழிபாடு தயாரிப்போம்

| | நாள் | முதல் வாசகம் | இரண்டாம் வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | 04. 01. 2026 | எசா.60:1-6 | எபே3:2-3a,5-6 | மத்.2:1-12 |
| 2 | 11. 01. 2026 | எசா. 42:1-4,6-7 | தி.ப. 10:34.-38 | மத்.3:13-17 |
| 3 | 18. 01. 2026 | எசா. 49: 3, 5-6 | 1 கொரி. 1: 1-3 | யோவா. 1: 29-34 |
| 4 | 25. 01. 2026 | எசா. 9: 1-4 | 1 கொரி. 1: 10-13, 17 | மத்.4: 12-23 |

# புதிய ஆண்டின் விடியல்....

**டிசம்பர் 31-ஆம் தேதி இரவு:**

**ஊ**ரே புத்தாண்டு கொண்டாட்டத்தில் மூழ்கியிருந்தது. வானவேடிக்கைகள், இசைகள், சிரிப்புகள்...

**ஆ**னால், அந்த வீடு மட்டும் அமைதியாக இருந்தது. அங்கே ராஜா தனியாக நின்று வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். "இந்த வருடம் என்ன செய்தேன்?" என்ற கேள்வி அவன் மனதில் மீண்டும் மீண்டும் ஒலித்தது.

**சி**ல வெற்றிகள் இருந்தன; அதைவிட அதிகமான தோல்விகளும் இருந்தன. சிலரிடம் கோபமாகப் பேசிவிட்டதற்கான வருத்தம், நல்ல வாய்ப்புகளை தவறவிட்ட சோகம், பெற்றோருக்காக போதிய நேரம் ஒதுக்காத குற்ற உணர்வு எல்லாம் ஒன்று சேர்ந்து அவன் மனதை கனமாக்கியது.

**அ**ப்போது "ராஜா"வா புத்தாண்டு ஜெபம் ஆரம்பிக்கப் போகிறது. என்று அம்மாவின் குரல் கேட்டது. அவன் மெதுவாக வீட்டிற்குள் சென்றான். சிறிய விளக்கின் வெளிச்சத்தில், குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக அமர்ந்திருந்தனர். அம்மா மெழுகுவர்த்தியை ஏற்றி, "பழைய ஆண்டில் நடந்தவற்றுக்காக நன்றிச் சொல்லுவோம்; புதிய ஆண்டை நல்ல மனதோடு வரவேற்போம்." என்றார்.

**அ**ந்த நொடியில்தான் ராஜாவுக்கு ஒன்று புரிந்தது. புதிய ஆண்டு என்பது பழையதை மறப்பதற்காக அல்ல; மாறாக பழைய அனுபவங்களில் இருந்து பாடம் கற்றுக்கொள்ள வந்த ஒரு வாய்ப்பு.

**ந**ள்ளிரவு மணி 12 அடித்தது. "ஹேப்பி நியூ இயர்!" என்ற குரல்கள் வீட்டை நிரப்பின. ராஜா கண்களை மூடி, மனதில் ஒரு தீர்மானம் எடுத்தான். இந்த ஆண்டு அதிகம் பேசாமல், அதிகம் கேட்பேன். கோபத்தை விடுத்து, பொறுமையை வளர்ப்பேன். வெற்றிக்காக ஓடுவதோடு, பிற மனிதர்களுக்காகவும் வாழ்வேன் என்று.

**வி**டியற்காலை சூரியன் மெதுவாக எழுந்தது. புதிய ஒளி, புதிய காற்று, புதிய நம்பிக்கை. ராஜா மெதுவாக சிரித்தான். ஏனெனில், அவன் ஒன்றைப் புரிந்துகொண்டான்; புதிய ஆண்டு கதவைத் தட்டவில்லை; ஆனால் புதிய மனிதனாக மாறும் வாய்ப்பை தான் கொடுத்தது...




# குழித்துறை மறைமாவட்டம்



## ஆயர் இல்ல திறப்பு விழா



**நாள் : 16.12.2025**

**உண்ணாமலைக்கடை**





# மறைமாவட்ட அன்பியப் பணிக்குழுவின் கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டம்
















# டிரினிட்டி மேய்ப்புப் பணி அலுவலக பணியாளர்களின் கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டம்







# மறைமாவட்ட அன்பியப் பணிக்குழுவின் பங்களவில் பயிற்சி

## முளகுமூடு மறைவட்டம்

### ஒருங்கிணையம் : நுள்ளிவிளை - கார்மல்

சிந்தனை: பங்கேற்பு, சவால்கள், பணிப்பகிர்வு
கருத்தாளர்: திரு. S. ஜாண் பெல்லார்மின்
தலைமை: அருட்பணி. P. மரிய சூசை
பங்கேற்பு: 35 நபர்கள்.





## திரித்துவபுரம் மறைவட்டம்

### ஒருங்கிணையம் : லூர்துகிரி

சிந்தனை: பங்கேற்பு, சவால்கள், பணிப்பகிர்வு
கருத்தாளர்: திருமதி. T. ஷீலா
தலைமை: அருட்பணி . ஆரோக்கிய சுவாமி
பங்கேற்பு: 57 நபர்கள்.



# திரித்துவபுரம் மறைவட்டம்

## ஒருங்கிணையம் : மஞ்சாலுமூடு 28.12.2025

சிந்தனை: பங்கேற்பு, சவால்கள், பணிப்பகிர்வு
கருத்தாளர்: திருமதி. T. ஷீலா
தலைமை: அருட்பணி . ஆரோக்கிய சுவாமி
பங்கேற்பு: 28 நபர்கள்.



## ஒருங்கிணையம் : பிலாவிளை 28.12.2025

சிந்தனை: பங்கேற்பு, சவால்கள், பணிப்பகிர்வு
கருத்தாளர்: திருமதி. T. ஷீலா
தலைமை: அருட்பணி . ஆரோக்கிய சுவாமி
பங்கேற்பு: 54 நபர்கள்.



# காரங்காடு மறைவட்டம்

## ஒருங்கிணையம் : வர்த்தான்விளை 28.12.2025

சிந்தனை:
தலைமையத்துவம்
கருத்தாளர்:
திரு. S. ஜாண்
பெல்லார்மின்
பங்கேற்பு:
39 நபர்கள்.





வர்த்தான்விளை
ஒருங்கிணைய
புதிய நிர்வாகிகள்

# வேங்கோடு மறைவட்டம்

## ஒருங்கிணையம் : வேங்கோடு 21.12.2025

சிந்தனை:
தலைமையத்துவம்
கருத்தாளர்:
வேதியர் மா. பேபிகமலா
முன்னிலை :Fr. அமல்ராஜ்
திரு. ஆல்பின் ஜோஸ்
பங்கேற்பு: 37 நபர்கள்.





வேங்கோடு ஒருங்கிணைய
புதிய நிர்வாகிகள்

# மறைவட்ட பொதுக்குழு கூட்டங்கள்
# கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டங்கள்

## திரித்துவபரம்








# முளகுமூடு













மறைவட்ட கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டம்

# மாத்திரவிளை

## காட்சிப்படுத்துதல் விழா














மறைவட்ட கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டம்

# மாத்திரவிளை
















மறைவட்ட கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டம்

# புத்தன்கடை

## மறைவட்ட கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டம்





## புத்தன்கடை மறைவட்ட நிர்வாகிகள் கூட்டம்



# களப்பணியாளர் சந்தித்த ஒருங்கிணையங்கள் & அன்பியங்கள்





சுக்கான்கடை ஒருங்கிணைப்பு



பாளையம் ஒருங்கிணைப்பு



சித்தன்தோப்பு ஒருங்கிணைப்பு

ஆரோக்கியபுரம் அன்பியம் : 11





ஆரோக்கியபுரம் அன்பியம் : 7

# களப்பணியாளர் சந்தித்த ஒருங்கிணையங்கள் & அன்பியங்கள்





**கல்லங்குழி**
**ஒருங்கிணைப்பு**



**கல்லங்குழி**
**அன்பியம் 1**



## களப்பணியாளர் சந்தித்த ஒருங்கிணையங்கள்



குலசேகரம் ஒருங்கிணையம்



இட்டகவேலி ஒருங்கிணையம்

பொன்மனை ஒருங்கிணையம்





ஈஞ்சக்கோடு ஒருங்கிணைய கிறிஸ்து பிறப்பு விழா

ஈஞ்சக்கோடு ஒருங்கிணைய கிறிஸ்து பிறப்பு விழா



# களப்பணியாளர் சந்தித்த ஒருங்கிணையங்கள்





கல்லுப்பாலம்
ஒருங்கிணையம்



திரித்துவபுர மறைவட்ட
செயற்குழு உறுப்பினர்கள்

# களப்பணியாளர் சந்தித்த அன்பியங்கள்





சிராயன்குழி அன்பியம் : 4



சிராயன்குழி அன்பியம் : 5



சிராயன்குழி அன்பியம் : 1



சிராயன்குழி அன்பியம் : 4



சிராயன்குழி அன்பியம் : 6



களியக்காவிளை
அன்பியம்: 7



களியக்காவிளை
அன்பியம்: 2



பரமன்விளை
அன்பியம்: 2



# களப்பணியாளர் சந்தித்த அன்பியங்கள்

குழிச்சல் அன்பியம் 3





அம்பலக்கடை அன்பியம் 1

குழிச்சல் அன்பியம் 5





# களப்பணியாளர் சந்தித்த ஒருங்கிணையங்கள்

உடவிளை





முஞ்சிறை

காஞ்சாம்புறம்





வேங்கோடு மறைவட்ட நிர்வாகிகள்



# களப்பணியாளர் சந்தித்த அன்பியங்கள்



உடவிளை
அன்பியம் : 5



உடவிளை
அன்பியம் : 1



குழிவிளை
அன்பியம் : 1



ஊற்றுக்குழி அன்பியம் :3
கிறித்து பிறப்பு விழா



செபஸ்தியார்புரம்
அன்பியம் : 6



குழிவிளை
அன்பியம் : 2



வளனூர் அன்பியம் : 8
கிறிஸ்து பிறப்பு விழா



வளனூர் அன்பியம் : 2
கிறிஸ்து பிறப்பு விழா

# வரைவு வாக்காளர் பட்டியல்!
## வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை!

| மாவட்டம் | SIR-க்கு முன் | SIR-க்கு பின் | நீக்கம் |
|---|---|---|---|
| அரியலூர் | 5,30,890 | 5,06,522 | 24,368 |
| தென்காசி | 13,75,091 | 12,25,797 | 1,51,902 |
| ஈரோடு | 19,97,189 | 16,71,760 | 3,25,429 |
| சென்னை | 40,04,694 | 25,79,676 | 14,25,018 |
| திருப்பூர் | 24,44,929 | 18,81,144 | 5,63,785 |
| தேனி | 11,30,303 | 10,04,564 | 1,25,739 |
| கோவை | 32,25,198 | 25,74,608 | 6,50,590 |
| திருவாரூர் | 10,75,577 | 9,46,097 | 1,29,480 |
| கன்னியாகுமரி | 15,92,872 | 14,39,499 | 53,373 |
| சேலம் | 30,30,537 | 26,68,108 | 3,62,429 |
| சிவகங்கை | 12,29,933 | 10,79,105 | 1,50,828 |
| திருப்பத்தூர் | 9,99,411 | 8,82,672 | 1,16,739 |
| விருதுநகர் | 16,26,485 | 14,36,541 | 1,89,964 |
| பெரம்பலூர் | 5,90,490 | 5,40,942 | 49,548 |
| செங்கல்பட்டு | 27,87,362 | 20,85,491 | 7,01,871 |
| நீலகிரி | 5,89,167 | 5,33,076 | 56,091 |
| கடலூர் | 21,93,577 | 19,46,759 | 2,46,818 |
| தூத்துக்குடி | 14,90,685 | 13,28,158 | 1,62,527 |
| கரூர் | 8,98,362 | 8,18,672 | 79,690 |
| தி.மலை | 21,21,902 | 18.69.740 | 2.52.162 |
| நாகை | 5,67,730 | 5,10,392 | 57,338 |
| காஞ்சிபுரம் | 14,01,198 | 11,26,924 | 2,74,274 |
| திருச்சி | 23,68,967 | 20,37,180 | 3,31,787 |
| மயிலாடுதுறை | 7,83,500 | 7,08,122 | 75,378 |
| தஞ்சாவூர் | 20,98,561 | 18,92,058 | 2,06,503 |
| ராணிப்பேட்டை | 10,57,700 | 9,12,543 | 1,45,157 |
| மதுரை | 27,40,631 | 23,60,157 | 3,80,474 |
| புதுக்கோட்டை | 13,94,112 | 12,54,525 | 1,39,587 |
| நாமக்கல் | 14,66,660 | 12,72,954 | 1,93,706 |
| நெல்லை | 14,18,325 | 12,03,368 | 2,14,957 |
| திருவள்ளூர் | 35,82,226 | 29,62,449 | 6,19,177 |
| தருமபுரி | 12,85,432 | 12,03,917 | 81,515 |
| விழுப்புரம் | 17,27,490 | 15,44,625 | 1,82,865 |
| ராமநாதபுரம் | 12,08,690 | 10,91,326 | 1,17,384 |
| திண்டுக்கல் | 19,34,447 | 16,09,553 | 3,24,894 |
| கிருஷ்ணகிரி | 16,80,626 | 15,06,077 | 1,74,549 |
| வேலூர் | 13,03,030 | 10,88,005 | 2,15,025 |

முன்பு 6,41,14,587 வாக்காளர்கள் / பின்பு 5,43,76,755 வாக்காளர்கள் / நீக்கம்! 97,37,832 வாக்காளர்கள்

# YOU TUBE

https://www.youtube.com/@anbiyamkuzhithuraidiocese945

# Website

bcckuzhithurai.com

# E-mail ID

bcckuzhithuraigmail.com

# Office No.
# +91 7358947467

# POPE JOHN PAUL II COLLEGE OF EDUCATION



**MULAGUMOODU**

Administered by the Diocese of Kuzhithurai






Recognized by
NCTE, New Delhi

Affiliated with
Tamil Nadu Teachers Education
University, Chennai

## 2025-2026

**B.ED. ADMISSION IS GOING ON**

**JOIN NOW!**

**NO DONATION**
**AFFORDABLE FEE**

**Nanjil Milk plant campus, Mulagumoodu**

## DISTINCTIVE FEATURES

I. Communicative English Classes
2. Digital Learning Facilities
3. Special Computer Education Programme
4. Life Orientation Programmes
5. Preparation for Competitive Examinations
6. Training in Various Arts
7. Add-on Courses for advanced Pedagogy (Certified by the Central Government of India)
8. Campus Interviews for Placements
9. Driving Classes (Two- and Four -Wheelers)
10. Effective Instructional Strategies for learning outcomes

## SUBJECTS OFFERED

COMMERCE & ECONOMICS, HISTORY, PHYSICAL SCIENCE, BIOLOGICAL SCIENCE, COMPUTER SCIENCE, MATHEMATICS, TAMIL, ENGLISH

04651 249585

73589 26485, 95971 09985

www.popejohnpaul2.edu.in

popejohnpaul2@gmail.com



# புனித தேவசகாயம்

## முதன்மைத் திருத்தலப் பெருவிழா

**நட்டாலம், குழித்துறை மறைமாவட்டம்.**



### ஒன்றாம் திருவிழா

**08-01-2026 வியாழக்கிழமை**

மாலை 4.30 மணி:
செபமாலை, புனிதரின் புகழ்மாலை
மாலை 5.45 மணி:
**திருக்கொடி பவனி**
(முள்ளங்கனாவிளை குருசடி சந்திப்பு)

மாலை 6.30 மணி: திருக்கொடியேற்றம், ஆடம்பரக் கூட்டுத் திருப்பலி
தலைமை : மேதகு ஆயர் **நசரேன் சூசை DD**
(கோட்டாறு மறைமாவட்டம்)

### இரண்டாம் திருவிழா

**09-01-2026 வெள்ளிக்கிழமை**

காலை 10.00 மணி: செபமாலை, புனிதரின் புகழ்மாலை, திருப்பலி
மாலை 5.00 மணி : செபமாலை, புனிதரின் புகழ்மாலை, திருப்பலி

### மூன்றாம் திருவிழா

**10-01-2026 சனிக்கிழமை**

காலை 10.00 மணி: செபமாலை, புனிதரின் புகழ்மாலை, திருப்பலி
மாலை 5.00 மணி : செபமாலை, புனிதரின் புகழ்மாலை, திருப்பலி

### நான்காம் திருவிழா

**11-01-2026 ஞாயிற்றுக்கிழமை**

மாலை 4.30 மணி : செபமாலை, புனிதரின் புகழ்மாலை, திருப்பலி
இரவு 7.00 மணி : "புனிதரின் திருவுருவப் பவனி"

### ஐந்தாம் திருவிழா

**12-01-2026 திங்கள்கிழமை**

காலை 10.00 மணி: செபமாலை, புனிதரின் புகழ்மாலை, திருப்பலி
மாலை 5.00 மணி : செபமாலை, புனிதரின் புகழ்மாலை, திருப்பலி

### ஆறாம் திருவிழா

**13-01-2026 செவ்வாய்கிழமை**

காலை 10.00 மணி: செபமாலை, புனிதரின் புகழ்மாலை, திருப்பலி
மாலை 5.00 மணி : செபமாலை, புனிதரின் புகழ்மாலை, திருப்பலி

### ஏழாம் திருவிழா

**14-01-2026 புதன்கிழமை**

காலை 7.00 மணி : செபமாலை, புனிதரின் புகழ்மாலை, திருப்பலி
காலை 9.00 மணி : **பெருவிழா ஆடம்பர கூட்டுத் திருப்பலி**
தலைமை : மேதகு ஆயர் **ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ் DD**
(குழித்துறை மறைமாவட்ட ஆயர்)
முற்பகல் 11.30 மணி : மலையாளத் திருப்பலி
தலைமை : மேதகு ஆயர் Dr. **கிறிஸ்துதாஸ் ராஜப்பன்**
(துணை ஆயர் திருவனந்தபுரம் உயர் மறைமாவட்டம்)
மாலை 4.30 மணி : **ஆடம்பர கூட்டுத் திருப்பலி**
(சிரியன் வழிபாட்டு முறை)
தலைமை : மேதகு ஆயர் **வின்சென்ட் மார் பவுலோஸ்**
(மார்த்தாண்டம் மலங்கரை சிரியன் கத்தோலிக்க மறைமாவட்ட ஆயர்)
மாலை 6.00 மணி : திருக்கொடியிறக்கம்

திருவிழா நாள்களில் திருப்பலியைத் தொடர்ந்து மதியம், இரவு அன்பு விருந்து நடைபெறும்.

திருவிழா நாட்களில் இரவு 8.00 மணிக்கு மறைவட்டங்கள் மகிழ்வுடன் நடத்தும்
**"சிறப்புக் கலைநிகழ்ச்சிகள்"** நடைபெறும்.

14-01-2026 புதன்கிழமை
புனிதருடைய பெருவிழா அன்று
மாலை 6.30 மணிக்கு புனித
தேவசகாயத்தின் திருவடியில்
**"நடனங்களின் சங்கமம்"**

எல்லா நாட்களும் அனைவரும்
கலந்து கொண்டு திருவிழாவைச்
சிறப்பிக்க அன்பாய் அழைக்கின்றோம்,

*அனைவரும் இணைந்து வருவீர் !*
*புனிதரின் அருள் வரங்களை நிறைவாய் பெறுவீர் !!*
*இறை ஆசீர் பெற்றுச் செல்வீர் !!!*



இறை ஆசியும் புனிதரின் வழிகாட்டுதலும் நிறைவாய் பெற்றுச் செல்ல அழைக்கும்
மேதகு ஆயர் **ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ் DD** (குழித்துறை மறைமாவட்ட ஆயர்)
அருள்பணி. முனைவர் **இரா. பால் ரிச்சார்டு ஜோசப்** (திருத்தல அதிபர்)



*அனைவருக்கும் அன்பியப்பணிக்குழுவின் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்...*